Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, UTHANGARAI.**

Calender
Miscellaneous
Preliminary Register

**Case No. CC. 44/2018**

Deposition of ...PW4.............Witness for ....................Prosecution

Name : லஷ்மணன்

Father's / Husband Name: அண்ணாமலை

Village : காரப்பட்டு

Taluk :

Caste :

Calling : விவசாயம்

Religion :

Age : 75

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 24.06.2022.

**முதல் விசாரணை:**

**நான் தற்போது காரப்பட்டு கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும்,. இந்த வழக்கில் இறந்து போன கோடீஸ்வரன் எனது மச்சான் ஆவார். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு நான் எனது வீட்டிலிருந்த போது விபத்து ஏற்பட்டு கோடீஸ்வரன் இறந்து போய்விட்டதாக கேள்வி பட்டு ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் வந்து பார்த்தேன். அடுத்த நாள் பிரேத பரிசோதனை செய்து எங்களிடம் கொடுத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

இறந்து போன கோடீஸ்வரன் எனது சொந்த மச்சான் ஆவார். போலீசார் என்னை ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் மாலை 05.00 மணிக்கு விசாரணை செய்தார்கள். விபத்து நடந்த மறுநாள் பிரேத பரிசோதனை செய்தார்கள். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் உள்ள சங்கதிகளை தான் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். 04.02.2017 புலன் விசாரணை அதிகாரியிடம் இந்த விவரங்களை சொல்லியுள்ளேன். என்னை வேறு எதுவும் விசாரிக்கவில்லை. விபத்து நடந்ததாக நான் கேள்விப்பட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, UTHANGARAI.**

Calender
Miscellaneous
Preliminary Register

**Case No. CC. 44/2018**

Deposition of ...PW5.............Witness for ....Prosecution................

Name : முருகன்

Father's / Husband Name: துரைசெல்வன்

Village : கோட்டபதி, ஊத்தங்கரை

Taluk :

Caste :

Calling : விவசாயம்

Religion :

Age : 47

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 24.06.2022.

முதல் விசாரணை:

நான் தற்போது கோட்டபதியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். அவர் எனது மாமியார். 04.02.2017 அன்று மதியம் 03.00 மணியளவில் எனது மச்சான் கலைச்செல்வன் எனக்கு போன் செய்து தனது அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டதாக தெரிவித்தார். நான் சம்பவ இடத்திற்கு வருவதற்குள் அவரை ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று

விட்டார்கள். அங்கு வைத்து அவர் இறந்து விட்டார். மாமியார் வனஜாவிற்கு கையிலும், காலிலும் விபத்தின்போது அடிப்பட்டிருந்தது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

விபத்து நடந்த இடத்தில் புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரணை செய்தார். முதல் விசாரணையில் சொல்லியது போல் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் வைத்தும் சம்பவ இடத்தில் வைத்தும் என்னை விசாரணை செய்தார்கள். என்னை இரண்டு இடத்திலும் வைத்து விசாரணை செய்தார்கள். மருத்துவமனையில் காலை 10.00 மணிக்கு விசாரணை செய்தார்கள். பிரிவு சாலையில் வைத்து 09.00 மணிக்கு விசாரித்தார்கள். 04.02.2017 ஆம் தேதி விபத்து நடந்ததாக போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். என்னை இரண்டு இடத்திலும் போலீசார் விசாரிக்கவில்லை என்றம், மாமானார் என்பதால் என்னை விசாரித்தாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, UTHANGARAI.**

Calender
Miscellaneous
Preliminary Register

**Case No. CC. 44/2018**

Deposition of ...PW6..............Witness for ....................Prosecution

Name : **சின்னதம்பி**

Father's / Husband Name: **பெருமாள்**

Village : **காரப்பட்டு, ஊத்தங்கரை**

Taluk :

Caste :

Calling : **ஓட்டுனர்**

Religion :

Age : 56

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 24.06.2022.

**முதல் விசாரணை:**

**நான் தற்போது காரப்பட்டில் வசித்து ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். இந்த கையொப்பத்தை நான் ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் கோடீஸ்வரன் இறந்ததற்கான இந்த கையொப்பம் வாங்கினார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம்**

அ.சா.ஆ.2 ஆகும்.

( அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது. )

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

கடந்த 05.02.2018 ஆம் தேதி காலை 06.00 மணிக்கு ஊத்தங்கரை காவல் நிலைய காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு சென்று என் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார். அதற்கு சாட்சியாக நான் பார்வை மகஜரில் நான் 2வதாக கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

இல்லை.

ஒம்/–XXX,
குற்றவியல் நடுவர்,
ஊத்தங்கரை.